ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2407/03 - 2024 ඔක්තෝබර් මස 22 වැනි අඟහරුවාදා - 2024.10.22

*2407/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தம் செய்தல்**

திருத்த இலக்கம் 09

கீழ்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**டபிள்யு. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

*2024*, ஒற்றோபர் *22*.

**பகுதி** I

திருத்த இலக்கம் 01 - 2014, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய மற்றும் 1887/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 1905/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 03 - 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய மற்றும் 2006/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 04 - 2017, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய மற்றும் 2049/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 05 - 2019, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய மற்றும் 2138/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 06 - 2020, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய மற்றும் 2190/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 07 - 2021, யூன் மாதம் 23 ஆந் திகதிய மற்றும் 2333/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 08 - 2022, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதிய மற்றும் 2303/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

**பகுதி** II

7.2.5 ஆட்சேர்ப்பு முறை :

7.2.5.1 எழுத்துமூலப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை தொடர்பான விடயங்கள் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

7.2.5.1.1 எழுத்துமூலப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி மற்றும் அதன் கீழான விடயங்கள் நீக்கப்பட்டு பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது.
எழுத்துமூலப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி - சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் அங்கீகரிக்கப்படும் வேறு நிறுவனமொன்று.

7.2.5.2.1 இன் கீழான விடயங்கள் நீக்கப்பட்டு பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.
விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு வரிசைப்படி நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு விடயப் பரப்பின் (சிவில், இயந்திரவியல், மின், இரசாயனவியல் மற்றும் பூகோள வளங்கள்) கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் எண்ணிக்கை பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

தற்போதுள்ள அட்டவணை II இற்குப் பதிலாகக் கீழ்வரும் அட்டவணை II பதிலீடு செய்யப்படுகின்றது.

அட்டவணை II

நேரடி ஆட்சேர்ப்புக்காக நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் நோக்கங்கள் மற்றும் முறைகள்

(அ) இலங்கை பொறியியல் சேவை தரம் III பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் மேற்குறித்த 7.2.3 இன்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குமுறையினைத் தீர்மானிக்கும் நோக்கில் இப்பரீட்சை நடாத்தப்படும். எனவே, மேற்குறித்த பரீட்சையானது 100 புள்ளிகளைக்கொண்ட எழுத்துமூல உளச்சார்பு பரீட்சையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சைக்கான வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டமைந்துள்ளதோடு, அதற்காக 1/2 மணித்தியாலங்கள் வழங்கப்படும். மேற்குறித்த பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குமுறை தீர்மானிக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(இ) மேற்குறித்த *7.2.3* இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞானத்தைக் கற்பதனூடாகப் பெற்றுக் கொண்ட அறிவின் அடிப்படையில் பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானம் எடுப்பதற்கான ஆற்றல் போன்றவற்றைத் தீர்மானிப்பதை நோக்கமாகக்கொண்டு இப்பரீட்சை வடிவமைக்கப்பட்டுள்ளது.

EOG 10-0195

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.